NSW GOVERNMENT | Education
Public Schools

## ‘Nitbusters தின’த்திற்கான பின்தொடர் கடிதம்

## Nitbusters Day follow up letter

பிள்ளையின் பெயர் ________________________ வகுப்பு / குழு ____________________

Child’s name Class/Group

அன்புடைய பெற்றோர்/கவனிப்பாளருக்கு

உங்கள் பிள்ளைக்கு தலைப் பேன் இருக்கிறதா என்று சோதிக்கப்பட்டது. இச் சோதனையின் முடிவு கீழே தரப்பட்டுள்ளது.

☐ தலைப் பேன் எதுவும் காணப்படவில்லை.
No head lice were found.

☐ ஈர்கள் (பேன் முட்டைகள்) காணப்பட்டன.
Nits (eggs) were found.

☐ பேன்களும், ஈர்களும் (பேன் முட்டைகளும்) காணப்பட்டன.
Head lice and nits (eggs) were found.

உங்கள் பிள்ளைக்கு பேன் அல்லது ஈர் இருந்தால், உங்கள் பிள்ளைக்கு நீங்கள் தொடர்ந்து சிகிச்சையளிக்க வேண்டும் எனவும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் பேனும் ஈரும் இருக்கிறதா என்று சோதிக்க வேண்டும் எனவும் Nitbusters பரிந்துரைக்கிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தகவல் ஏட்டில் சிகிச்சைக்கான தெரிவுமுறைகள் சொல்லப்பட்டுள்ளன.

‘Nitbusters தின’த்தில் பங்குபெற உங்கள் பிள்ளையை அனுமதித்ததற்கு ‘Nitbusters திட்ட’த்தின் சார்பாக உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறோம். பயிற்சி பெற்ற ‘Nitbusters’ குழு ஒன்று இப்போது எமது பாடசாலையிலுள்ளது. தேவை எழுந்தால், மேலதிக ‘Nitbusters தின’ங்களை எமது பாடசாலையில் இந்த அணியினர் நடத்தலாம். இத் திட்டத்தினைப் பற்றி உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தாலோ, அல்லது அடுத்த ‘Nitbusters தின’த்தில் நீங்கள் தன்னார்வத் தொண்டாற்ற விரும்பினாலோ, தயவு செய்து பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ள உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவு செய்து ‘தொலைபேசி மொழிபெயர்ப்பாளர் சேவை’யினை 131 450 எனும் இலக்கத்தில் அழைத்து உங்களது மொழி பேசும் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். உங்களது உரையாடலில் உதவுவதற்கென மொழிபெயர்ப்பாளர் ஒருவரை தொலைபேசி இயக்குனர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இச்சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

* ‘NSW சுகாதார சேவை’யின் ‘Nitbusters’ வலைத்தளத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் இத்தகவகல்கள் அமைந்துள்ளன.